தரிசு நிலங்களாக இருந்த இடங்களில் இன்றைக்கு பல்வேறு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன!

# செய்யாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்திடுவீர்!

## சட்டப் பேரவையில் — செய்யாறு ஓ.ஜோதி பேச்சு!

சென்னை, மே 1 - சட்டப் பேரவையில் தொழில்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை மானியக் கோரிக்கையில் செய்யாறு தொகுதி உறுப்பினர் ஓ.ஜோதி பேசுகையில் செய்யாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

சட்டப் பேரவையில் தொழில்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை மானியக் கோரிக்கையில் செய்யாறு தொகுதி உறுப்பினர் ஓ.ஜோதி பேசியதாவது:

பெரியாரின் இலட்சியத்தையும், அண்ணாவின் கொள்கையையும், கலைஞரின் அறிவாற்றலையும் மும்மூர்த்திகளின் முழு உருவமாகத் திகழ்ந்துக் கொண்டிருக்கும் எங்கள் திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

சனாதனம் என்ற ஒற்றை சொல்லில் எதிரிகளையும் நிலைகுலைய செய்யும் எங்கள் இளம் தலைவர், துணை முதல்வர் அவர்களையும், கழக பொதுச் செயலாளர், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும், ஒரு சாமானியனை இந்த அவைக்கு அறிமுகப்படுத்தி, என் தொகுதிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, என்னை தாயாகவும், தந்தையாகவும் என்னை வழி நடத்தி செல்லும், எதிலும் வல்லவர் எங்கள் பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், எனக்கு பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாவட்ட கழகச் செயலாளர் எம்.எஸ். தரணி வேந்தன் அவர்களுக்கும், ஒன்றிய, நகர கழகச் செயலாளர்கள், கூட்டணி கட்சித் தோழர்களுக்கும், என்னை இந்த அவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய செய்யாறு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் 2025-2026 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, தொழில் முதலீடுகள், ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின்மீது பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு வணக்கம். தமிழகத்தில் எங்கும் கணினி, எதிலும் கணினி என்ற வகையில், தகவல் தொழில்நுட்பத் துறையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் IT Park உருவாக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் துறை ஒரு புரட்சியை உண்டாக்கும் என்பதைக் கணித்து, நாட்டிலேயே முதன்முறையாக 1997ல் அத்துறைக்கான கொள்கையை அறிவித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். அதன் காரணமாகத்தான், இன்று தமிழ்நாட்டில் கணினியில் ஒரு புரட்சி நடக்கிறது. மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு பட்டா, சிட்டா, பிறப்பு, இறப்பு சான்றுகள், வருமானம், இருப்பிடம், வகுப்புச் சான்றுகள், வாரிசு சான்று என எல்லா சேவைகளும் இன்று உடனடியாகக் கிடைக்கிறது.



### தமிழ்நாட்டில் முக்கியமான வளர்ச்சித்துறை!

தகவல் தொழில்நுட்பம் என்பது கணினி, இணையம், மென்பொருள் மற்றும் தகவல் பரிமாற்றம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து வரும் ஒரு துறையாகும். இன்று நம்முடைய நாள் முழுவதும் தகவல் தொழில்நுட்பம் எங்கும் கட்டாயமாகிவிட்டது. உதாரணமாக கல்வி, மருத்துவம், வணிகம், அரசாங்க சேவைகள் என அனைத்திலும் இதன் பங்கு மிக முக்கிய மானதாக உள்ளது. இணையம் மற்றும் mobile செயலிகள் மூலம் நமக்குத் தேவையான தகவல்களை நொடி பொழுதில் பெற முடிகிறது. தமிழ்நாட்டில் இது ஒரு முக்கிய வளர்ச்சி துறையாக வலுப்பெற்றுள்ளது.

மக்களுக்கு தகவல் சென்று சேருவதற்கு, இந்தத் தகவல் தொழில்நுட்பம், காலதாமதம் ஏற்படாமல், மிக விரைவாக மக்களுக்கு தகவல்கள் சென்றடைகிறது. நம் சட்டமன்றத்தில்கூட தினசரி அமைச்சர் பெருமக்களும், பேரவைத் தலைவர் அவர்களும் அரசின் மானியக் கோரிக்கைகளின் தீர்மானத்தை வாசித்து, அந்தந்த உறுப்பினர்களின் மேசையிலுள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என வாசிக்கப்படுகிறது என்றால், இதுதான் காகிதமில்லா தமிழகத்தின் பட்ஜெட் ஆகும். உலகத்தின் செய்திகள் எல்லாம், இன்று கையளவில் கொண்டு வந்து சேர்ப்பது கணினியே ஆகும்.

### சட்டமன்ற நிகழ்வுகள் இணையத்தில் பதிவேற்றம்!

வரலாற்றுச் சிறப்புமிக்க நூற்றாண்டு கண்ட சட்டமன்ற நிகழ்வுகளை, ஆவணங்கள் அனைத்தும் இணையத்தில் பதிவேற்றம் செய்து, பொது மக்கள் அனைவரும் அதனை பார்வையிடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் தொழில் துறையில் சிறந்து விளங்குகிறது. சொன்னதை செய்வோம், செய்வதை சொல்வோம் என்ற முதல்வரின் கோட்பாட்டிற்கிணங்க, தமிழ்நாட்டில் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் பெண்கள் 43 சதவீதம் பேர் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர் என ஆய்வறிக்கை கூறுகிறது. 2030க்குள் தமிழ்நாட்டின் one trillion dollar economy அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கு தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது நம்முடைய திராவிட மாடல் அரசு. தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் விளங்கி வருகிறது.

முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழக அரசு சிறப்பாக செயல்படுவதாக 2024 2025 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் தமிழகத்திற்கு புகழாரம் சூட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 2024-2025 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி 9.69 சதவிகித வளர்ச்சி, இந்திய அளவில் முதலிடமாக தமிழகம் பெற்றுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த அதிகபட்ச வளர்ச்சி இதுவே ஆகும். ஒன்றிய அரசாங்கம் வாயில் வடை சுடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஒன்றிய அரசு ஆண்டிற்கு ஒரு கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கிக் கொடுப்போம் என்றார்கள் ஆனால், மக்களுக்கு ஏமாற்றத்தை மட்டுமே தந்தார்கள். ஆனால், தமிழகத்தில் தொழிற்புரட்சி ஏற்பட வேண்டுமென்றால் முதலீடுகளை ஈர்க்க வேண்டும். அதற்குண்டான கட்டமைப்பை உருவாக்கித் தர வேண்டும் என்பதற்காக தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு வகையில் தமிழகத்தில் தொழில் தொடங்க வருபவர்களுக்கு ஏற்றவகையில் தமிழ்நாடு முதலீட்டாளர்களின் முதல் முகவரி என்ற இலக்கோடு செயல்பட்டு வருகிறார்.

### வேலை வாய்ப்பு முகாம்கள்!

2030-க்குள் 30 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடித்தர வேண்டும் என்பதற்காக துணை முதல்வரின்கீழ் இயங்கிவரும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைமூலம் மாவட்டந்தோறும் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு பல்வேறு தொழில் நிறுவனங்களில் அவர்களுடைய திறமைக்கேற்ப இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் வகையில் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழகம் பொருளாதாரத்தில் சிறந்து விளங்குகிறது. கல்வியில் முதலிடம், தொழிற்புரட்சியிலும் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது. எனது செய்யாறு தொகுதியில் இயங்கி வரும் SIPCOT, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டு அன்றைய துணை முதல்வர், இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் தொடங்கப்பட்டது.

நம்முடைய முதலமைச்சர் மிகவும் கைராசிக்காரர். எங்களுடைய அமைச்சர் உழைப்பால் உயர்ந்தவர் ஆகிய இருவருடைய பெரும் முயற்சியால் வெறும் தரிசு நிலங்களாக இருந்த இடத்தில் இப்பொழுது 70க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இந்த தொழிற்சாலை களில் நேரடியாக 70 ஆயிரம் பேரும், மறைமுகமாக 50 ஆயிரம் பேரும் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

செய்யாறு SIPCOTல் சில அரசியல் இயக்கங்கள், தான் அரசியலில் இருப்பதை காட்டிக்கொள்வதற்காக பல தொழிற்சாலைகள் வெளிமாநிலத்திற்குச் சென்று விடுகிறது என்ற தோற்றத்தை உருவாக்குகின்றனர். இளைஞர்களின் வேலை வாய்ப்பைக் கெடுக்கும் நோக்கத்தோடு செயல்பட்டு வருகின்றனர். மேலும், பல்வேறு வகையில் இன்னல்களையும், கொடுத்து வருகின்றனர். ஆனால் நம் முதல்வரோ வெளிநாடுகளுக்குச் சென்று முதலீட்டாளர்களை சந்தித்து பெரும் முதலீடுகளைப் பெற்று வந்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர பாடுபட்டுக் கொண்டு வருகிறார்.

ஆனால், கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் இருந்து பல தொழிற்சாலைகள் வெளிமாநிலங்களுக்கு சென்றுவிட்டன. உலக முதலீட்டாளர்கள் மாநாடு என்ற பெயரில் நடைபெற்றன. “உயிர்த்தெழு தமிழா” என்பது வெறும் slogan அல்ல நம்முடைய வளர்ச்சிக்கான வழிகாட்டி. இன்று நம்முடைய திராவிட மாடல் நாயகர் எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் தமிழகத்தில் எல்லா பகுதியிலும் சமச்சீரான வளர்ச்சி, வேலைவாய்ப்பும் உருவாக்கித் தருகிறார்.

### பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையை அடைந்தவர்கள்!

“உழுபவன் கணக்குப் பார்த்தால் உழவுகோல் கூட மிஞ்சாது” என்பார்கள். எங்கள் பகுதி முழுக்க முழுக்க விவசாயத்தை மட்டுமே நம்பி இருந்த எங்கள் பகுதியில் SIPCOT தொழிற்பேட்டை அமைத்துத் தந்ததின் காரணமாக எங்கள் பகுதியில் வேலை வாய்ப்பு பெற்று பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். குடிசை வீடுகள் எல்லாம் இப்பொழுது மாடி வீடுகளாக மாறியுள்ளன. வாழ்க்கையில் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்துள்ளன.

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களும், சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் ஆகிய என்னையும் அழைத்துக் கொண்டு SIPCOT வளாகத்தில் இயங்கி வரும் Mahendra & Mahendra நிறுவனத்தின் batteryஆல் இயங்கும் காரை இயக்கிப் பார்த்து மகிழ்ந்தோம். இதற்கு பெருமை சேர்த்து தந்த முதல்வருக்கு நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்யாறு SIPCOT தொழிற்பேட்டைக்கு புதிய வழித்தடம் ஓரகடம் முதல் செய்யாறு SIPCOT வரை தொழில் வழித்தடம் அமைக்க 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு தந்த முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும், தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தொழில் வழித்தடத்தை மேலும் திருவண்ணாமலை வரை நீட்டித்து, திருவண்ணாமலை ஆன்மீக வழிபாட்டுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காகவும், அங்கு அமைந்துள்ள SIDCO நிறுவனத்திற்கும் அங்கிருந்து செய்யாறு SIPCOT தொழிற்பேட்டைக்கு வரும் இளைஞர்களின் நலனுக்காகவும், இத்தொழில் வழித்தடத்தை திருவண்ணாமலை வரை நீட்டித்துத் தருமாறு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

செய்யாறு தொழிற்பேட்டைக்கு நிலம் கொடுப்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அவர்களின் திறமைக்கு ஏற்ப வேலைவாய்ப்பை முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தொழிற்சாலையில் CSR நிதியினை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின்படி அந்தத் தொகுதியின் முக்கிய பணிகளைச் செய்து தர ஆவன செய்யுமாறு தொழில் துறை அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன்.

தொகுதியினுடைய கோரிக்கைகள்,

செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி இயங்கி வருகிறது. இங்கு சுமார் 8,000 மாணவ, மாணவிகள் இரண்டு சுழற்சி முறையில் பயின்று வருகிறார்கள்.

மேற்படி கல்லூரி சுமார் 65 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது. அதே வளாகத்தில் மகளிருக்கு தனியாக ஒரு கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அனக்காவூர் ஒன்றியம், தென் எலப்பாக்கம், வெம்பாக்கம் ஒன்றியம் வெங்களத்தூர் கிராமத்தில் இயங்கிவரும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்தி தருமாறு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நீர்வளத் துறை மூலமாக செய்யாறு அணைகட்டு கால்வாயை தூர்வாரி தருமாறும், செய்யாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து தருமாறும் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு உட்கோட்டம், வெம்பாக்ககம் வட்டத்திலுள்ள சுமார் 97 ஏரிகள் காஞ்சிபுரம் உட்கோட்டத்தில் இயங்கி வருகின்றன. அதை திருவண்ணாமலை மாவட்டத்திற்கு மாற்றித் தருமாறு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

### பாலாற்றின் குறுக்கே தடுப்பணை!

செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் வட்டம், வெங்களத்தூர் அருகில் பாலற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து தருமாறு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, மாவட்டத்திலேயே அதிக வருமானம் கொண்ட தொகுதி செய்யாறுதான். மாவட்ட தலைநகராக மாற்றுவதற்கு உண்டான அனைத்து அரசு அலுவலகங்களும் அமைந்துள்ளதால் செய்யாற்றை தலைமையிடமாகக் கொண்டு, புதிய மாவட்டம் உருவாக்கி தருமாறு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாரில் இயங்கி வந்த தாலுகா மருத்துவமனை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை தரமுயர்த்தப்பட்டதால், அதே வட்டத்தில் நாவல்பாக்கம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டார மருத்துவமனையாக தரமுயர்த்தி தருமாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

செய்யாரில் இயங்கி வரும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் புதிய செவிலியர் பயிற்சி மையம் அமைத்து தருமாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

செய்யாறு தொகுதிக்குட்பட்ட ஏனாதவாடி, புரிசை, பிரம்மதேசம், அப்துல்லாபுரம் ஆகிய பகுதிகளுக்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்து தருமாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சைக்கு அடுத்தப்படியாக நெல் உற்பத்தியில் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு மற்றும் வெம்பாக்கம் பகுதியில்தான் அதிக அளவில் விளைச்சல் உள்ளது. ஆகையால் இங்கு ஒரு விவசாய ஆராய்சி மையம் அமைத்துத் தருமாறு வேளாண்மைஉழவர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

### செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம்!

திருவண்ணாமலை மாவட்டம், ராணிப்பேட்டை மாவட்டம் இணைக்கின்ற வகையில் ஆற்காடு தொகுதி சொரையூரையும், செய்யாறு பகுதி கடுகனூரையும் இணைக்கின்ற வகையில் செய்யாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் அமைத்து தருமாறு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வெம்பாக்கம் வட்டம், தென்னம்பட்டு மற்றும் அப்துல்லாபுரம், காழியூர், ஏனாதவாடி ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருமாறு மீன்வளம்மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதி மக்களுக்காக பல்வேறு கோயில்களுக்கு நிதி அளித்து, திருப்பணி மற்றும் குடமுழுக்கு செய்து அந்தப் பகுதியின் ஆன்மிக மக்களின் மனம் மகிழ்கின்ற வகையில் பல்வேறு கோயில்களுக்கு நிதி தந்த இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்யாரிலிருந்து தென் மாவட்டங்களை இணைக்கும் வகையில், திருப்பதியிலிருந்து ஆற்காடு, செய்யாறு, வந்தவாசி வழியாக மதுரைக்கு இரண்டு SETC விரைவு பேருந்துகளை இயக்கி தருமாறு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

செய்யாறு தொகுதிக்குட்பட்ட வெம்பாக்கம் தாலுகாவில் புதியதாக ஒரு காவல் நிலையமும், ஒரு தீயணைப்பு நிலையமும் அமைத்துத் தருமாறு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

‘படுத்துக் கிடப்பவனுக்கு பகல் எல்லாம் இரவு தான்; எழுந்து உழைப்பவனுக்கு திக்கெல்லாம் கிழக்கு; எங்கள் முதல்வரின் மூலதனமே உழைப்பு; எங்கள் முதல்வரின் உழைப்பே பலர் பேரின் தூக்கத்தை தொலைத்து இருக்கிறது.’ வெல்வோம் 200! படைப்போம் வரலாறு! தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு ஓ.ஜோதி பேசினார்.




தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய–நகர–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தென்காசி வடக்கு மற்றும் சேலம் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 01.05.2025 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | தென்காசி வடக்கு | மாவட்டக் கழக அலுவலகம், ரயில்வே பீடர் ரோடு, சங்கரன்கோவில். |
| 02.05.2025 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் மேற்கு | ஸ்ரீ வாசுதேவ் மஹால், சங்ககிரி. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 28-04-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


கொல்கத்தா நட்சத்திர விடுதியில் தீவிபத்து:

## கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் உயிரிழப்பு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல்!

சென்னை, மே 1–

கொல்கத்தாவில் உள்ள நட்சத்திர விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் உயிரிழந்ததையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முத்துகிருஷ்ணன், குழந்தைகள் தியா, ரிதன் ஆகியோரும் மற்றும் பலரும் உயிரிழந்தனர் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்; நெஞ்சம் கலங்கினேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, இத்துயர் மிகு நேரத்தில் அவர்களது குடும்பத்தினருக்கு நமது அரசு துணை நிற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.